www.Padasalai.Net www.CBSEtips.in

11 R

Register No.

# காலாண்டுத் தேர்வு – 2023

## பொதுத்தமிழ்

மணி : 3.00 மதிப்பெண்கள் : 90

### பகுதி – I

குறிப்பு : 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும். 14 x 1 = 14

1. பாயிரம் இல்லது............அன்றே. அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
2. மண்ணுக்கு வளம் சேர்ப்பன
அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை அனைத்தும்
3. கருப்பட்டி பனங்கற்கண்டு போன்றவை
1) மதிப்புக்கூட்டுப் பொருட்கள் 2) நேரடிப் பொருட்கள்
அ) 1 மட்டும் சரி ஆ) 2 மட்டும் சரி இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு
4. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுவர்
அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்
5. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
அ) பகுதி, விகுதி, இடைநிலை ஆ) பகுதி, சந்தி, விகாரம் இ) பகுதி, இடைநிலை ஈ) பகுதி, விகுதி
6. திருக்குறளில் உள்ள இயல்களின் எண்ணிக்கை............. அ) 7 ஆ) 8 இ) 9 ஈ) 10
7. துன்பப்படுபவர் அ) தீக்காயம்பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர் இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்
8. ஒப்புரவு என்பதன் பொருள் அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது
9. நிழல்போலத் தொடர்ந்தான் – இது எவ்வகை உவமை? அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) உரு
10. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்?
அ) குறுந்தொகை ஆ) நற்றிணை இ) அகநானூறு ஈ) புறநானூறு
11. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது? அ) மொழி பெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
இ) தலைமைத் துவி பாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை
12. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்
13. உலகச் சிட்டுக்குருவிகள் நாள் அ) ஏப்ரல் 20 ஆ) அக்டோபர் 20 இ) மார்ச் 20 ஈ) ஜனவரி 20
14. புலன் என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது அ) பள்ளு ஆ) கலம்பகம் இ) குறவஞ்சி ஈ) தூது

### பகுதி – II பிரிவு – 1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3 x 2 = 6

15. இனம் மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
16. குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?
17. சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?
18. 'மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம்' – கூற்றினை உறுதிப்படுத்துக.

#### பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக. 2 x 2 = 4

19. உ. வே.சா அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.
20. தமிழ்நாட்டின் மாநில மரம் – சிறுகுறிப்பு வரைக.
21. பேச்சு மொழி எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?

#### பிரிவு – 3

எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடை தருக. 7 x 2 = 14

22. பிறமொழிச் சொற்களுக்குத் தமிழாக்கம் தருக. அ) மாதம் ஆ) சந்தோஷம்
23. இலக்கணக்குறிப்பு தருக. அ) செங்கயல் ஆ) கேட்டல்
24. ஒன்றனுக்கு மட்டும் உறுப்பிலக்கணம் தருக அ) விடுத்தல் ஆ) மலிந்த
25. ஒன்றனுக்கு மட்டும் புணர்ச்சி விதி தருக. அ) பொதுச் சிறப்பு ஆ) புகழெனின்
26. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைக்க. உலை, உளை, உழை.
27. கலைச்சொல் தருக. அ) Prefix ஆ) Earth environment
28. புதிர்களுக்கான விடைகளைத் தருக. அ) அடிக்கவும் செய்யலாம் ; கோடைக்கும், கூழாகவும் குடிக்கலாம் –
ஆ) பூவின் உறுப்பும் நானே ; புன்னகையின் பிறப்பிடமும் நானே – கம்பு, இதழ், மதி, ஆழி
29. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
கால் நடை அல்லது) அறிவில்லாதவன்
30. குறிஞ்சித் திணையின் பெரும்பொழுது, சிறுபொழுது எழுதுக.

### பகுதி – III பிரிவு – 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக. 2 x 4 = 8

31. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
32. சலச வாவியில் செங்கயல் பாயும் – இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
33. விரும்பியதை அடைவது எப்படி? குறள் வழி விளக்குக.
34. உள்ளுறை உவமை, இறைச்சி – விளக்குக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

பிரிவு – 2


**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.** **2 x 4 = 8**

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா – நும் கருத்தை எழுதுக.
36. சமணப் பள்ளிகளும் பெண் கல்வியும் குறிப்பு வரைக.
37. ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு வெளிப்படுத்தும் சமுதாயச் செய்திகள் யாவை?
38. மொழி முதல் இறுதி எழுத்துகள் எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** **3 x 4 = 12**

39. உவமை அணியை விளக்குக. **(அல்லது)**
பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.
40. நயம் பாராட்டுக.
மீன்கள் கோடி கோடிசூழ வெண்ணிலாவே ! ஒரு
வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே !
வளர்ந்து வளர்ந்து வந்த வெண்ணிலாவே ! மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ? வெண்ணிலாவே !
கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே ! பகல்
கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே !
பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே ! நீயும்
பாரில் வர அஞ்சினையோ ? வெண்ணிலாவே !
– கவிமணி
41. பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.
அ) இக்கரைக்கு அக்கரை பச்சை **(அல்லது)**
ஆ) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
42. தமிழாக்கம் தருக.
அ) The pen is mightier than sword. ஆ) A picture is worth a thousand words.
இ) Knowledge rules the world. ஈ) Work while you work and play while you play.
43. கருத்துப்படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.




பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக** **3 x 6 = 18**

44. நன்னூல் பொதுப் பாயிரம் சிறப்புப் பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
**(அல்லது)**
அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் – இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.
45. சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.
**(அல்லது)**
பௌத்தக்கல்வி, சமணக்கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.
46. வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்கக.
**(அல்லது)**
பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீவிர் அறிவன யாவை?

பகுதி – V

**அடிபிறழாமல் எழுதுக.** **4 + 2 = 6**

47. அ) சிறகிலிருந்து... காவியம் பாடலை எழுதுக.
ஆ) .... பொருட்டு என முடியும் திருக்குறளை எழுதுக.

www.Padasalai.Net